

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத் துறை சார்பில் 68 கோடியே 82 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள், சேமிப்புக் கிடங்குகள், சேமிப்பு வசதியுடன் கூடிய துணை ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கான கல்விசார் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக தலைவருமான துறைமுகம் காஜா சந்தித்து பக்ரீத் திருநாளை முன்னிட்டு வாழ்த்துப் பெற்றார்.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் –

# ரூ.5.16 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட பூமாலை வணிக வளாகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூன் 30 -**

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் ரூ.5.16 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட 26 மாவட்ட பூமாலை வணிக வளாகங்களை திறந்து வைத்து, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ.50 கோடி மதிப்பிலான நுண் தொழில் நிறுவன நிதித் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட 26 மாவட்டங்களில் உள்ள பூமாலை வணிக வளாகங்களை திறந்து வைத்தார். மேலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ.50 கோடி மதிப்பிலான நுண் தொழில் நிறுவன நிதித் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மொத்தம் 5.60 லட்சம் ரூபாய் கடனுதவியாக வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதிகளில் விற்பனை செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான முதன்மை விற்பனை வளாகமும், தேவையின் அடிப்படையில் கூடுதல் வணிக வளாகங்களும் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவ்வணிக வளாகங்களுக்கு "பூமாலை வணிக வளாகம்" எனப் பெயர் சூட்டி திறந்து வைத்தார்.

அரியலூர், திருப்பூர் மற்றும் புதிய மாவட்டங்கள் நீங்கலாக 29 மாவட்டங்களில் பூமாலை வணிக வளாகங்கள் செயல்பட்டு வந்தன. பல ஆண்டுகளாக உரிய பராமரிப்பின்றி இருந்த இவ்வளாகங்களை சீரமைக்கும் பொருட்டு 29 வணிக வளாகங்களில் பெரம்பலூர் மாவட்ட வணிக வளாகம் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாலும், நாகப்பட்டினம் மாவட்ட பூமாலை வணிக வளாகம் முழுவது மாக சேதமடைந்ததாலும், முதற் கட்டமாக இவற்றில் 26 மாவட்ட அளவிலான பூமாலை வணிக வளாகங்களை புனரமைத்து, ஒரே மாதிரியான வண்ணம் பூசிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, 26 மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், கிராமப்புறங்களில் வாழும் மக்களை பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்திடும் வகையில், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் எனப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள் நீங்கலாக 31 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மகளிர் நுண் தொழில் நிறுவனங்களை வலுப்படுத்த தேவையான புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும், மகளிர் குழுக்களை தொழில் முனைவோராக உருவாக்கி, அந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கவும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வாயிலாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2023-24 ஆம் ஆண்டிற்கான வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் மானியக் கோரிக்கையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், வாழ்ந்து கட்டுவோம் திட்டத்தின் கீழ், இந்த நிதியாண்டில் மகளிர் புதிதாக தொழில் தொடங்குவதற்கும், ஏற்னவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் 1000 கிராமங்களில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் "நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி திட்டம்" ரூ.50 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்" என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, இத்திட்டத்தின் தொடக்க நிகழ்வாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 10 மாவட்டங்களைச் சார்ந்த 10 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மொத்தம் 5.60 லட்சம் ரூபாய் கடனுதவியாக வழங்கினார். இந்த நிதியண்டிற்குள் 50 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் பயனாளர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்பட்டுவரும் வட்டாரங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களாகவும், குறைந்தபட்சம் 30 சதவிகித பயனாளிகள் மாற்றுத் திறனாளி களாகவும், நலிவுற்றோராகவும் இருப்பர். இவர்களின் தொழில் திட்டங்களின் அடிப்படையில் 70,000/- ரூபாய் வரை இத்திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்படுகிறவருக்கு கடனுதவி வழங்கப்படும். மேலும், நுண் தொழில் நிறுவன நிதியுதவி பெறும் தொழில் முனைவோர் தங்களுக்குத் தேவையான தொழில் மேம்பாட்டுச் சேவைகளை மதி சிறகுகள் தொழில் மையத்தின் வாயிலாக பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு. தாரேஸ் அஹமது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா. பிரியங்கா பங்கஜம், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி ஜெ.இ.பத்மஜா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**காட்டம்பட்டி கா.கந்தசாமி**
**ஜூன் 30 (2018)**



கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


### மொனாக்கோ ஆற்றல் படகு சவாலில் பங்கேற்கவுள்ள

# குமரகுரு கல்வி நிறுவன மாணவர் குழுவிற்கு ரூ.15 லட்சம் உதவித் தொகை!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 30 -

மொனாக்கோ ஆற்றல் படகு சவாலில் பங்கேற்கவுள்ள குமரகுரு கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த டீம் சீ சக்தி மாணவர் குழுவிற்கு உதவித்தொகையாக ரூ.15 இலட்சம் காசோலையினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், மொனாக்கோ ஆற்றல் படகு சவாலில் பங்கேற்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியாவின் ஒரே அணியும், இந்தியாவின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் படகை உள்நாட்டு உந்துவிசை அமைப்புடன் உருவாக்கியுள்ள கோயம்புத்தூர், குமரகுரு கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த டீம் சீ சக்தி (Team Sea Sakthi) என்ற மாணவர் குழுவினை ஊக்குவிக்கும் வகையில், இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவுத் தொகையான 65 இலட்சம் ரூபாயில் அரசின் சார்பில் உதவித் தொகையாக 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்.

இவ்வாண்டு ஜூலை மாதம் ஐரோப்பாவில் நடைபெறவுள்ள சர்வதேச ஆற்றல் படகு சவாலில் (International Energy Boat Challenge) கலந்து கொள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த குமரகுரு பொறியியல் கல்லூரியின் 10 மாணாக்கர்களைக் கொண்ட டீம் சீ சக்தி (Team Sea Sakthi) குழு தேர்வான ஒரே இந்திய அணி என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்பினை ஊக்குவித்து ஐரோப்பாவில் நடைபெறவுள்ள சர்வதேச ஆற்றல் படகு சவாலில் கலந்து கொள்ள உதவித் தொகையாக 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் குமரகுரு பொறியியல் கல்லூரி மாணவர்கள் குழுவுக்கு வழங்கப்பட்டது.

இம்மாணவர் குழு நாட்டிலேயே முதல்முறையாக ஹைட்ரஜன் எரிபொருளைக் கொண்டு இயங்கும் படகை வடிவமைத்துள்ளனர். இக்குழு இத்தாலி, கனடா, துபாய், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா உட்பட 10 நாடுகளைச் சேர்ந்த 17 அணிகளுடன் போட்டியிட உள்ளனர்.

இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் அருண்ராய் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விவசாயப் பெருமக்கள் மண் வளத்தினை அறிந்து – அதற்கேற்ப

# உரமிடும் முறையினை ஊக்கப்படுத்த 'தமிழ் மண்வளம்' இணைய முகப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூன் 30–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில், விவசாய பெருமக்கள் தங்கள் நிலத்தில் உள்ள மண்வளத்தினை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள "தமிழ் மண்வளம்" எனும் புதிய இணைய முகப்பினை** (http://tnagriculture.in/mannvalam) **தொடங்கி வைத்தார்.**

**வேளாண் உற்பத்தி உயர மண் வளம் அவசியம்**

பயிரின் மகசூலை உயர்த்துவதில் மண் வளம் முக்கிய பங்காற்றுகிறது. மண் வளம் என்பது, மண்ணின் தன்மை, மண்ணிலுள்ள கரிம, அமில நிலை, தழை, மணி, சாம்பல் போன்ற பேரூட்டச்சத்துக்கள், இரும்பு, மாங்கனீசு போன்ற நுண்ணூட்டச்சத்துக்களின் அளவினை குறிக்கும். மகசூலுக்கு முக்கிய காரணியாக விளங்கும் மண்ணின் வளம் குறித்து ஒவ்வொரு விவசாயியும் அறிந்து அதற்கேற்ப உரமிடுவது மிகவும் அவசியமாகும்.

**"தமிழ் மண்வளம்" இணைய முகப்பு**

விளைநிலங்களின் மண்வளத்தை மேம்படுத்தும் வகையில், கடந்த 2022-23 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், "தமிழ் மண்வளம்" என்ற இணைய முகப்பு உருவாக்கப்படும் என்று வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட "தமிழ் மண்வளம்" எனும் இணைய முகப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது.

**"தமிழ் மண்வளம்" இணைய முகப்பின் பயன்கள்**

விவசாயிகள் கணினி மூலமாகவோ அல்லது கைபேசி மூலமாகவோ http://tnagriculture.in/mannvalam/ எனும் இணையதள முகவரியில் தமிழ்மண் வளம் இணையதளத்தை அணுகலாம். இந்த இணைய முகப்பில், விவசாயிகள் தங்கள் மாவட்டம், வட்டாரம், கிராமம், தங்களது நிலத்தின் புல எண், உட்பிரிவு எண்ணை பதிவு செய்தால், உடனடியாக, மண் வளம் குறித்த அனைத்து விபரங்களும் பதிவிறக்கம் செய்யப்பட்டு, அவர்களது கைபேசியில் மண்வள அட்டையாக மின்னணு வடிவில் கிடைக்கும். இந்த இணைய முகப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் மண்டல வாரியாகவும் மாவட்டத்தில் உள்ள வட்டாரம் மற்றும் கிராமங்கள் வாரியாகவும் மண்ணின் வகைகள் தரப்பட்டுள்ளன.

மண்ணின் தன்மை, நிலத்தடி நீரின் வகைப்பாடு, உப்பின் நிலை, களர் அமில நிலை (pH), அங்ககக் கரிமம் (Organic Carbon), சுண்ணாம்புத்தன்மை (Calcareousness) போன்ற வேதியியல் குணங்கள் பற்றிய விபரங்களும், தழை, மணி, சாம்பல் சத்துக்கள் போன்ற விவரங்களும், கந்தகம், இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான் போன்ற நுண்ணூட்டச்சத்துகளின் விவரங்களும், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் காடுகள் சார்ந்த எவ்வகை பயிர்களை சாகுபடி செய்யலாம், தேர்ந்தெடுக்கும் பயிருக்கு எவ்வளவு உரமிட வேண்டும் போன்ற பரிந்துரைகளையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

"தமிழ் மண்வளம்" என்ற இணைய முகப்பு இந்திய அளவில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு, நாட்டிலேயே முன்னோடியாக விளங்குகிறது.

இந்த இணைய முகப்பின் பயனாக, விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண் வளத்தை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதன் மூலம் சாகுபடி செலவு குறைவதுடன், மண் வளம் காக்கப்பட்டு, பயிர் மகசூல் அதிகரிக்கும்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக்டர் எல். சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு

**பொதுப்பணித்துறை**

**கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5.**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 07 கட்டட (க&ப) வட்டம்/2023–2024/நாள். 23.06.2023.**

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை / இரு உறை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை–5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | **இரு உறை முறை :** சென்னை – 15, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 190 "சி" வகை அரசு அலுவலர்களுக்கான புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி. **முன்வைப்புத் தொகை : ரூ.50,32,000/–** | ரூ. 10043.91 இலட்சம் | 24 மாதங்கள் | வகுப்பு I A |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **08.08.2023 மாலை 03.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **08.08.2023 மாலை 04.00 மணி.**

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது., (முகூபொ)**
**கட்டட ( கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம்,**
**சேப்பாக்கம், சென்னை – 5.**

**செ.ம.தொ.இ/3303/ஒப்பந்தப்புள்ளி/2023**

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."**

தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.05/2023-2024/வ1/நாள்-26.06.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி அவர்களால் அரசு ஆணை (Ms.) எண். 7 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (EAP.II(2))துறை, நாள். 30.01.2023 RIDF XXVIII–ன்படி நபார்டு கடனுதவியில் அனுமதிக்கப்பட்ட 2022–2023 ஆம் ஆண்டிற்கான 158 பாலங்கள் கட்டுதல் / திரும்ப கட்டுதல் திட்டத்தின் கீழ் **திருநெல்வேலி மற்றும் பரமக்குடி** (நெ) நபார்டு (ம) **கிராமச்சாலைகள்** கோட்டங்களுக்கான இரண்டு பால பணிகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட இனவாரி விலை ஒப்பந்தப்புள்ளிகள் இருஉறைமுறை இணைய வழியில் மட்டுமே 01.08.2023 **அன்று** 15.00 **மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், முக்கிய நிகழ்வுகளின் நேரமும் தேதியும் மற்றும் அனைத்து இதர விபரங்களும் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 07.07.2023 **முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏற்படின் அவைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/3304/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி-2**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"